எம்.சி.ஓ.பி எண்: 3996/2021 தேதி: 06.08.2026

எ,மசா. : 1

பெயர் : பிரீத்திவிதாஸ்

த/பெ. : ரத்தினதாஸ்

வயது : 34

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ,மசாஆ 1 முதல் 4 வரை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எமசாஆ 3 ஆதார் அட்டை விபத்தில் இறந்தவரின் வயதை நிரூபிக்கக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. எமசாஆ 4ல் இறந்தவரின் வயது 47 என்று உள்ளது. அந்த நேரத்தில் அங்கு இருந்தவர்கள் சொன்னதன் பெயரில் அது வயது குறிப்பிட்டு இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரி. இறந்தவரின் ஓட்டுநர் உரிமம் விபத்து சமயத்தில் தொலைந்துவிட்டது என்றால் சம்பந்தப்பட்ட ஆர்டி ஓ அலுவகத்தில் அதனுடைய நகலை பெறமுடியும். எமசாஆ 2 ஓட்டுர் உரிமம் நாட் புரடியூஸ்ட் என்று உள்ளது. நாங்கள் ஓட்டுநர் உரிமம் பற்றிய தகவலை அறிந்துகொள்ள ஆர்டிஓ அலுவகத்திற்கு சம்மன் அனுப்பினோம். அந்த அழைப்பானை மீண்டும் திரும்பவில்லை. அவ்வாறு அழைப்பானை நீதிமன்றத்திற்கு திருப்பப்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ஆர்டிஓ அலுவகத்திற்கு அழைப்பானை அனுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் உள்ள காரணத்தினால் அடிப்பட்டு இறந்த நபர் 3–ம் தரப்பினர் என்பதால் எங்கள் நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. காப்பீடு விதிமீறல்கள் இருப்பதால் நாங்கள்இழப்பீடு தரமுடியாது. இறந்தவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றாலும் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.